මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **PRE/2024/91** **2024.09.18**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

### 2024.08.15 ஆம் திகதி தொடக்கம் 2024.09.18 ஆம் திகதி பி.ப 04.30 மணி வரையான காலத்தினுள் சமூக ஊடகங்களுடன் தொடர்புபட்ட தேர்தல் முறைப்பாடுகள்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் சமூக ஊடகங்களில் வெளிவரும் செய்திகள், பதிவுகள், பதிலளிப்புகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் தொடர்பாக பல்வேறு தரப்பினர்களினால் அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகள் சார்ந்த இடையிணைப்பிகள் கண்காணிக்கப்படுவதோடு ஒழுங்குபடுத்தப்படுகிறது. அதற்கிணங்க கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை மீளாய்வு செய்து 2024 சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள்/வேட்பாளர்களின் பாதிப்புக்குக் காரணமாக அமையும், அதேபோல், சட்டவிரோதமான ஊக்கப்படுத்தல்களுடன்கூடிய இடையிணைப்பிகளை நீக்குமாறு அறிவித்து மெடா, யூடியூப், டிக்டொக், கூகுல் ஆகிய சம்பந்தப்பட்ட சமூக ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சமூக ஊடக நிறுவனங்கள் அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான 802 இடையிணைப்பிகள் காணப்படுகின்றன. அத்தகைய இடையிணைப்பிகளின் இதுவரையான பொழிப்பு பின்வருமாறு:-

| சமூக ஊடக நிறுவனங்களினால் வெற்றிகரமாக நீக்கப்பட்ட இடையிணைப்பிகளின் எண்ணிக்கை | சமூக ஊடக நிறுவனங்களினால் நீக்குவதற்கு மறுக்கப்பட்ட இடையிணைப்பிகளின் எண்ணிக்கை | குறித்த நிறுவனங்களிலிருந்து பின்னூட்டல் தகவல்கள் கிடைக்கப்பெறவுள்ள இடையிணைப்பிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 121 | 116 | 565 |

இந்த அனைத்து இடையிணைப்பிகளும் பின்வரும் வகையீட்டின்கீழ் இனமறியப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது:-

| வெறுப்புப் பேச்சு | பொய்த் தகவல்கள் | பிரச்சார நடவடிக்கைகளுக்காக சிறுவர்களை ஈடுபடுத்திக்கொள்ளல் | தவறான செய்திகள் | 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணான உள்ளடக்கங்கள் |
|---|---|---|---|---|
| 247 | 309 | 13 | 174 | 59 |

2024.09.18 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் 2024 சனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரச்சார நடவடிக்கைகளும் முடிவடைவதால், அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள், கட்சிகளின்/ வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோர் சமூக ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து பிரச்சார நடவடிக்கைகளையும் இடைநிறுத்துமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது. ஏதேனுமொரு விதத்தில் அவ்வாறான பிரச்சார நடவடிக்கையொன்று சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படுமாயின், அவ்வாறான பிரச்சாரங்களின் உள்ளடக்கங்களை நீக்குவதற்காக சம்பந்தப்பட்ட சமூக ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்